# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040814

1. District : மாவட்டம் Theni District PS: காவல்நிலையம் V&AC, Theni Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/2023 Date: நாள் 30.05.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.05.2023, 23.05.2023, 29.05.2023 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.2023 Time : நேரம் 08.00 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 09.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 55 Kms Southwest

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Uthamapalayam, Theni District

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Murali (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. Andiyappan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1989 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Private Company Employee (g) Address : முகவரி 25.A, 16 ward, Muthiahyar Street, Gudalur, Uthamapalayam Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Manikandan, Firka Surveyor, Gudalur Firka, Uthamapalayam Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Computer typed separate sheet enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/05/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 30/5/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.5.2023 / 10.30 hrs.

Name: பெயர் P. Sundararajan
Rank: நிலை Dy. Supdt. of Police No. எண் ..........
V&A.C, Theni

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.**01/2023**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 30.05.2023-ம் தேதி 08.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கூடலூர், முத்தையர் தெரு, வார்டு-16, எண்-25 A-ல் வசிக்கும் திரு.ஆண்டியப்பன் என்பவரது மகன் திரு.முரளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. நான் B.SC (Hotel Management) வரை படித்துள்ளேன். சென்ற 2019 முதல் ஏப்ரல் 2023 ஆண்டு வரை கேரளா மாநிலம் கொச்சியில் Hotel மேலாளராக ஆக வேலை செய்தேன். தற்போது பெங்களூரில் வேலைக்குச் செல்ல இருக்கிறேன். எனது தந்தையார் திரு.ஆண்டியப்பன் அவர்கள் கடந்த 25.12.2022-ல் இறந்துவிட்டார். தாயார் திருமதி.முத்துகருப்பாயி அவர்கள் என்னுடன் வசித்து வருகிறார். கூடலூர் பைப்பாஸில் எனது தாயார் திருமதி.முத்துக்கருப்பாயி பெயரில் சர்வே எண். 1477/1B யில் 15.5 சென்ட் நிலமும் 1485/1A1A-ல் 7 சென்ட் நிலமும், கம்பம் பத்திரபதிவு அலுவலக ஆவண எண்கள் முறையே 2514/2016 நாள்: 13.06.2016-மற்றும் ஆவண எண்:7322/2022 நாள்: 30.11.2022 மூலம் பதிவு செய்தோம். அதன்பிறகு மேற்படி இடங்களை அளந்து உட்பிரிவு செய்து எனது தாயார் பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு சென்ற 08.05.2023-தேதியில் கம்பத்தில் உள்ள E-சேவை மையம் மூலம் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பங்கள் முறையே 2020/0105/25/128601 மற்றும் 2023/0105/25/128598 ஆகும். அதன்பிறகு நான் சென்ற 13.05.2023-ம் தேதி உத்தமபாாளையம் தாலுகா ஆபிஸ் சென்று அங்கு ஒட்டப்பட்டிருந்த சர்வேயர்களின் செல்நம்பரை பார்த்து கூடலூர் பிர்கா சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்களை எனது செல்போன் நம்பர் 9207865917 லிருந்து அவரது கைபேசி எண் 6379419094-க்கு அழைத்து எனது அம்மா பெயரிலான விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் உங்களது விண்ணபத்தை பார்த்துவிட்டேன், அளக்கவரும் போது கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின்னர் அடுத்த நாள் 14.05.2023-ஞாயிற்றுக்கிழமை சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்கள் எனது கைபேசிக்கு அழைத்து நிலம் இருப்பிடம் மற்றும் ஆவணங்கள் பற்றி கேட்டார். அதன்பிறகு சென்ற 18.05.2023-ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு சர்வேயர் திரு.மணிகண்டன் அவரது

கைபேசியில் என்னை அழைத்து இன்னும் சற்று நேரத்தில் உங்கள் இடத்தை அளப்பதற்காக வருகிறோம் நீங்கள் ஆவணங்களுடன் தயாராக இருங்கள் என்று சொன்னார். அதன்படி ஒரு காரில் 06.30 மணிக்கு சர்வேயர் மணிகண்டன் இருவருடன் மேலக்கூடலூர், ராஜீவ் நகர், மேற்கு தெருவில் உள்ள எங்கள் இடத்திற்கு வந்து அருகருகே இருந்த எங்களது இரண்டு இடத்தையும் என்னையும் டேப்பிடிக்கச் சொல்லி அளந்தார்கள். அளந்தபிறகு சர்வேயர் திரு.மணிகண்டன் என்னிடம் இரண்டு இடத்திற்கும் பட்டா மாறுதல் செய்ய இன்னும் வேலைகள் செய்து தாலுகா ஆபிசிற்கு அனுப்பி பட்டா பெறவேண்டும். அதற்கு செலவுகள் சேர்த்து ரூ.16,000/- ஆகும், பணத்துடன் இந்த இடங்களுக்கான வில்லங்கச் சான்றுகளையும் கொண்டுவரச்சொன்னார். அதற்கு நான் E-சேவை மையத்திலிருந்து விண்ணப்பம் செய்துள்ளேன் கவர்மெண்டுக்கு எதுவும் பணம் கட்டணுமா என்று கேட்டேன். அதற்கு அவர் விபரம் தெரியாத ஆளா இருக்கிறீங்க இந்த பணம் உங்கம்மா பெயரில் உள்ள இடங்களை அளந்து தனிப்பட்டா பெற ஏற்பாடு செய்வதற்கு எனக்கு ஆகும் செலவு என்றார். சரி சார் நான் ஏற்பாடு செய்து வருகிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். பின்னர் சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்கள் சென்ற 23.05.2023-ந் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு எனது செல்போனில் அழைத்து தான் கேட்ட பணம் ரூ.16,000/- ரெடியாகி விட்டதா என்று கேட்டார் அதற்கு நான் வெளியூர் வேலை இருப்பதால் இரண்டொரு நாள் கழித்து வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். அவரும் சரி என்று பணத்துடன் வரும்போது E.C நகல்களை எடுத்து வரும்படி சொன்னார். அதன்பிறகு சர்வேயர் கேட்ட பணத்தை புரட்ட கஷ்டமாக இருந்ததால் மீண்டும் இது சம்பந்தமாக நான் 29.05.2023-தேதி மாலை சுமார் 05.00 மணி அளவில் சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்களை சந்திக்க எனது கைபேசி மூலம் அவரது கைபேசிக்கு அழைத்து பேசினேன். அப்போது அவர் தான் உத்தமபாளையம் தாலுகா அலுவலகத்தில் இருப்பதாகவும் அங்கு வரும்படியும் சொன்னார். அதன்படி நான் மேற்படி அலுவலகத்திற்கு மாலை சுமார் 05.30 மணிக்கு சென்று அங்கு சர்வே பிரிவில் இருந்த உத்தமபாளையம் தாலுகா கூடலூர், பிர்கா சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்களை பார்த்து அவரிடம் வில்லங்கச் சான்று நகலை கொடுத்துவிட்டு எங்களது விண்ணப்பம் பற்றி கேட்டேன். அப்போது அவர் என்னிடம் எங்களது இடங்களில் அளவை மேற்கொண்டதற்கு இரண்டு படிவங்களில் கையெழுத்து பெற்றுக்கொண்டார். பின்னர் உங்களது அம்மா பெயரிலான இரண்டு பத்திரங்களில், ஒன்றில் இரண்டு இடங்கள் உள்ளதால் மொத்தத்தில் பட்டா மாறுதல் செய்ய மூன்று விண்ணப்பங்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் இரண்டு மட்டும் கொடுத்துள்ளீர்கள். மூன்றாவது விண்ணப்பம் பற்றி பிறகு பார்த்துக் கொள்ளளலாம், நீங்கள் ரூ.16,000/- பணத்துடன் வாருங்கள் என்றார். அதற்கு நான் அவ்வளவு பணம் புரட்ட முடியாது என்று சொன்னேன். அதற்கு

அவர் ரூ.1000/-ம் குறைத்து ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.5,000/- வீதம் மூன்று விண்ணப்பங்களுக்கும் ரூ.15,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நானும் என்ன சார் இன்னும் அதிகமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் அளந்து முடிச்சாச்சு, தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பி பட்டா பெற ஏற்பாடு செய்ய வேண்டி உள்ளது, இதையும் குறைத்துதான் சொல்லியுள்ளேன். இல்லாவிட்டால் வேலை நடக்காது என்று கரராக சொல்லி தான் கேட்ட பணத்தை எடுத்துக்கொண்டு நாளை 30.05.2023-ந்தேதி மதியம் வாக்கில் உத்தமபாளையம் வந்து போன் செய்தால் எங்கு வந்து பணத்தை கொடுப்பது என்று தான் சொல்வதாகவும் சொன்னார். பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் எனது தாயார் திருமதி.முத்துக்கருப்பாயி பெயரில் உள்ள இடங்களை அளந்து அம்மா பெயரில் தனிப்பட்டா பெற ஏற்பாடு செய்ய கூடலூர் பிர்கா சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/- கொடுத்து பெற மனம் இல்லாததால் கூடலூர் பிர்கா சர்வேயர் திரு.மணிகண்டன் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு எனது தயார் பெயரிலான நில பத்திரங்கள் மற்றும் E-சேவை மைய விண்ணப்ப நகல்களை இணைத்து இன்று 30.05.2023-ந் தேதி இந்த புகாரை கொடுக்கிறேன். அத்துடன் கூடலூர் பிர்கா சர்வேயர் திரு.மணிகண்டன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXX (ஆ.முரளி, 30.05.2023)

Sir, Received this complaint on 30.05.2023 at 08.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.01/2023, u/s 7 of the PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 30.05.2023 at 09.00 hrs. Sd/- (P.Sundararajan, Deputy Superintendent of Police, V&AC, Theni).

The original FIR, original complaint along with documents of Tr.A.Murali, S/o.Andiyappan, Gudalur, Uthamapalayam Taluk, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

30/5/2023

(P.SUNDARARAJAN)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.